கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 71 வது நாள்!

## எழும்பூரில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!





சென்னை, மே 4 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 71வது நாள் எழும்பூர் வடக்கு பகுதி - இ அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 71 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (01.5.2025) எழும்பூர் வடக்கு பகுதி 1) வட்டம்77 KP பார்க், 5th பிளாக், மோதிலால் தெரு சந்திப்பு, சென்னை. 2) வட்டம் 78 அடி.கே முதலிய தெரு, சூளை, சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வி.சுதாகர், சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள்: பரிதிஇளம்சுருதி, பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், க.நந்தீஸ்வரன்,

டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், ஆர்.பாபு, வி.விஜய்குமார், வி. அபாய், டி.தயாளன், ந.பாலு, சு.மோகன், ஆர்.எம்.ரங்கநாதன் எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: தி.தயாளன், சு.மனோகர், ஆர்.எம்.ரங்கநாதன், ஆர்.பாபு, வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், புனிதா.

இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---



# தி.மு.க. இளைஞர் அணி



## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | விருதுநகர் வடக்கு | இராஜாமணி அம்மாள் திருமண மண்டபம், மல்லாங்கிணர். |
| 06.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | சிவகங்கை | ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! வேலூர் மாவட்டம் -

# காட்பாடியில் மாபெரும் கால்பந்துப் போட்டி !

## கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

வேலூர்,மே 4-

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கால்பந்து போட்டி நேற்று தொடங்கியது.

போட்டியை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் தொடங்கி வைத்தார்.

இன்று மாலை இறுதி போட்டி நடக்கிறது . இதில் கழக பொதுச்

செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கு மாநகராட்சி துணை மேயர் எம். சுனில் குமார் தலைமை தாங்குகிறார். எட்டாவது வட்டச் செயலாளர் ஜே. சசிகுமார் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி.சுரேஷ்குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள்.

மாவட்ட பிரதிநிதி கே. கண்ணன் வட்டச் செயலாளர்கள் ஏ.எம்.சம்மந்தம் கே.என்.இளங்கோ மாமன்ற உறுப்பினர்கள் டிடா.சரவணன், எஸ்.ஆர். ரஜினி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். போட்டியை அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்,

மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபு, மாவட்ட பொருளாளர் நரசிம்மன் காட்பாடி தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார் புரவலர் துரை சிங்காரம் ஆகியோர் போட்டியை தொடங்கி வைக்கிறார்கள். போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு கழக பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

பகுதி செயலாளர்கள் ஜி.வன்னியராஜா என். பரமசிவம் பி.முருகப் பெருமாள், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கருணாகரன் எஸ்.தணிகாசலம் சி. ரவி, ஏ.கே.முருகன் ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், பொதுக்குழு உறுப்பினர் லோகநாதன் மாநகர அவை தலைவர் சூரி என்ற கோவிந்தன் மாநகர துணை செயலாளர்கள் ஒய்.தேவநேசன், முன்னா ஷெரீப், மாநகர பொருளாளர் நா.அசோகன் மற்றும் பகுதி செயலாளர்கள், மாவட்ட, நகர, பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

---

த.ஆறுமுகம் தலைமை! க.ஜெயராமன் முன்னிலை

# பெரம்பூர் 44வது வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, மே 4-

பெரம்பூர் தெற்குப் பகுதி44 வது வட்டக் கழகம் சார்பில், பொதுமக்கள் தாகம் தீர்க்கும் தண்ணீர் மற்றும் நீர் மோர் பந்தல் திறக்க வேண்டுமென்று, கழகத் தலைவரும், முதலமைச்சர் அவர்களின் ஆணையிட்டதன் பேரில், கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், இன்று (04.05.2025 ஞாயிறு) காலை 10.00 மணிக்கு, மேல்பட்டி பொன்னப்பன் தெரு பழனி ஆண்டவர் கோயில் தெரு சந்திப்பில், வட்டச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் தலைமையிலும், காலை 10.30 மணிக்கு,பெரியார் நகர் கட்டபொம்மன் தெருவில், பகுதி வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் பில்டர் பி.ரவி தலைமையிலும், தண்ணீர் மற்றும் நீர் மோர் பந்தலை,சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்.

பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் முன்னிலை வகிக்கிறார். வி.மணி, ப.வினோத், ஜே.கோமதி, நா.தட்சிணாமூர்த்தி, கோ.பொன்னிவளவன், ப.பிரதீப், புல்லட் பி.கிருஷ்ணன் ஆகியோர் வரவேற்கிறார்கள்.

இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, வி.தயாளன், ந.சர்ப ஜெயதாஸ், எஸ்.ஆர். கமலக்கண்ணன், மு.சாகுல் அமீது, ஜோதிமணி ராதாகிருஷ்ணன், கி.ராஜி, பி.சண்முகம், இரா.முரளிதரன், கு.பரத், கோ.சதீஷ்,த.சிவராம், எஸ்.கார்த்திகேயன், ஜி.பி.மோகன்பாபு, தி.சாம்பிளசன், ஜி.பி.சிவகுமார், பி. பிரேம் குமார், எஸ்.அப்துல் அஜீஸ், ராஜேந்திரன், எம்.பார்த்தீபன், தேவேந்திர ராஜ்குமார், ஆ.பொன்னுசாமி, க.மோகன்ராஜ், வே.தீனதயாளன், மோகன் சுந்தர், அ.வெங்கடேசன், பி.சசிகுமார், ஆ.ராதாகிருட்டிணன், வி.குணசேகரன், திருமதி.செ.லதா, ஆர்.கோவிந்தராஜுலு, எம்.பிரசாந்த், கே.சிரிதர், கா.வை லட்ராணி, ஜி.ராமகிருஷ்ணன், எஸ்.புஸ்பலதா மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

எஸ்.கண்ணன் நன்றி கூறுகிறார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பி. மதிவாணன்

### மே 4 (2023)



இளம்வயதிலேயே தீவிரமாக கழகப் பணியாற்றத் தொடங்கி, கிளைச் செயலாளர், வட்டப் பிரதிநிதி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், தொடர்ந்து 25 ஆண்டுகள் செம்பனார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

செம்பனார்கோவில் ஒன்றிய கவுன்சிலராகத்தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு கைதாகியதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, காலில் விலங்கிட்டுக் கடைத் தெருவில் இழுத்து வரப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் ஒரு ஆண்டும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மூன்று மாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்.

“கழகத்துக்கு இவர் ஆற்றிய பெரும் பணிகளுக்கான அங்கீகாரமாக ‘பெரியார் விருது’ பெற்றவர். இவரது மறைவு, கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கழக வரலாற்றில் அவர் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்” என கழகத் தலைவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

மரக்காணம் ஒன்றியக் குழுத் தலைவர்

# இரா.தயாளன் மாமியார் பேபி அம்மாள் மறைவு!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அஞ்சலி!

மரக்காணம், மே 4-

மரக்காணம் ஒன்றிய குழுதலைவர் தயாளன் மாமியார் பேபி அம்மாள் உடல் நலக் குறைவால் மறைவெய்தினார். அவரது உடலுக்கு தி.மு.க.வினர் அஞ்சலி செலுத்தினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவரும்,மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தயாளன் அவர்களின் மாமியார் பேபி அம்மாள் வயது 60. இவர்சென்னை வேளச்சேரியில்தனது மகன் கணேசன், மருமகள் இந்துஜாவுடன் வசித்து வந்தார்.

உடல் நலம் பாதிக்கப்பட்ட பேபிஅம்மாள் நேற்று முன்தினம் அதிகாலை 4.00 மணி அளவில் உயிரிழந்தார்.

இதையடுத்து அவரது உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. நேற்று (3.5.2025) மதியம் 2.00 மணிக்கு பேபி அம்மாள் உடல் ஊர்வலமாக கொண்டு சென்று வேளச்சேரி சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

உடல் நலக்குறைவால் உயிர் இழந்த பேபி அம்மாள் உடலுக்குவிழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ, விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் பழனி, ரவிச்சந்திரன், தி.மு.க. நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

உடல் நலக்குறைவால் உயிர் இழந்த பேபி அம்மாளுக்கு கணேசன், இந்துஜா என்ற மகனும்மருமகளும், மோகனப்பிரியா ஜெயராஜ், பவித்ரா தயாளன், மகள்கள் மருமகன்கள் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. பரமசிவம்

### மே 4 (2020)



கழகம் துவக்கப்பட்ட போதே உறுப்பினராகி, கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் பகுதியில் கிளைச் செயலாளர், ஒன்றிய பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

தனது சொந்த வருமானத்தில் ஒரு பகுதியை எடுத்து வைத்து, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் அன்று பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம், பேனா, பென்சில் ஆகியவற்றை இலவசமாகக்கொடுத்து வந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.